News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷ்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ ஆடி மீ சு ௳ (1947 ஜூலை 22 செவ்வாய்க்கிழமை) [இல நக

# கர்மயோகி சுந்தரர்

[வருகிற வெள்ளிக்கிழமை 25-7-47 சுந்தரர் திருநாள் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்படும்]

"வேண்டிக்கோள்வேன் தவநெறி"

சைவ சமயாசாரிகள் நால்வரும் திருக்கயிலாயத்திலே சிவபெருமானுக்கு உகந்த தொண்டுகளைப் புரிந்து வந்த நித்யா என்றும் அப்படிப்பட்ட நித்தியர்களில் ஒருவரான ஆலால சுந்தரர் என்பவரே சுந்தரமூர்த்தியாகத் திருவவதரித்தார். அவர் ஒருநாள், தமது வழக்கப்படி மலர் கொய்வதற்காக நந்த வனத்துக்குச் சென்றார். அங்கு அவர் ஏற்கெனவே உமாதேவியாருக்காக மலர் கொய்ய வந்திருந்த அநிந்திதை, கமலினி என்னும இரண்டு சேடியர்களைக் கண்டார். அப்போது பெரிய தவத்தைச் செய்த தெய்வநிசையானது வாழ்வை அடையவும், திருத்தொண்டத் தொகை எனனும் திருப்பதிகத்தை அருளவுமாக ஆண்டவன் திருவுள்ளம் இருந்தபடியால், ஆலாலசுந்தரர் அந்தப் பெண்களிடம் மனத்தைச் செலுத்தினர். அவர்களும் அவர்மீது ஆசைகொண்டு, தங்கள் கண்களால் அவரை நோக்கினர்.

பிறகு ஆலாலசுந்தரர் புஷ்பங்களைக் கொய்துகொண்டு திருச்சந்நிதியை அடைந்ததும், ஆதிமூர்த்தியான சிவபிரான் அவரை நோக்கி 'நீ மாதர்மேல் மனம் வைத்தனை ஆகலால் தென்புவிமீது தோன்றி, அவர்களுடன் காதலின்பம் கலந்து அனுபவித்து, மீண்டு இங்குவருவாய்' எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இதைக்கேட்ட ஆலால சுந்தரர், கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கி, "மையல் மானிடமாய் நான மயங்கும்போது, அடியேனைத் தடுத்தாட்கொண்டருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டனர். முக்கணநும் "அவ்வாறே ஆகுக" என்று அருள்புரிந்தார்.

இந்த வாக்குப் பிரகாரம்தான் சிவபெருமான் சுந்தரரை ஆட்கொள்ளும் பொருட்டு, அவருடைய விவாக காலத்தில் ஒரு வேதியராக வந்து தடுத்தார். இந்த மணம் நின்று போனாலும், அவர் பின்னர் இரு மனைவியரை மணந்து பொருளையும் போகத்தையும் விரும்பினாரேனும், அவருடைய மனம் எப்போதும் இறைவனிடமே இருந்தது. திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொள்ளப்பெற்ற சுந்தரர், தல யாத்திரை செய்யத் தொடங்கிப் புறப்பட்டுத் திருத்துறையூர் சென்று, அவ்விறைவனை வணங்கி, "தீவினையால் அவநெறியே செல்லாமே தடுத்தாண்டாய்; அடியேற்குத் தவநெறி தந்தருள்," என்று ஒரு பதிகம் பாடினார் பாசுரம்தோறும் 'உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே" என்றுள்ள தொடர் சுந்தரருடைய உள்ளக் கிடைக்கையைத் தெரிவிக்கின்றது அவர் இரு மனைவியரை மணந்தனர் என்றோம். அவ்விருவரும் கயிலாயத்தில் உமாதேவியாருக்குப் பணிவிடைகள் செய்துவந்த ஏற்கனவே பிரஸ்தாபிக்கப் பெற்ற) அநிந்திதை, கமலினி என்ற சேடியர்களே ஆவர். கமலினி பரவையாராகவும் அநிந்திதை சங்கிலியாராகவும் மண்ணுலகில் பிறந்தனர். இவ் விருவர்களின் சம்பந்தத்தைப் பற்றிப்பேசும் சுந்தரர், "மானழையாண்கண பரவையைத் தந்து ஆண்டானை' என்றும் "சங்கிலியோ டெனைப் புணர்ந்த தத்துவனை" என்றும் கூறுகிறார். இன்னொரிடத்தில் சங்கிலியைச்சார்ந்ததன் மூலமாகத் திருவாமாத்தூர்ப் பெருமான் அருளை அனுபவித்தன் என்று சொல்கிறார். இவ்விருவரையும இறைவன் அருளாலேயே சுந்தரர் பெற்றனர் என்பதை "பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரையுடையேன்," என்னும் தொடரில் சந்தேகமறத் தெரிவிக்கிறார். சுந்தரர் தமது மனைவியர்களுடன் வாழ்ந்த வாழ்க்கை காமம் கலவாத ஆன்மீய வாழ்க்கையேயாகும். அவர் இம்மண்ணுலகில் வாழ்ந்திருந்த காலம் பதினெட்டு வருஷங்கள். "பதினெட்டு பேதை பாலகனதாகும்" என்ற கணக்குப்படி பார்த்தால், சுமார் மூன்று வருஷங்களே அவர் யௌவனதசையில் இருந்திருக்க வேண்டும். இந்தக் குறுகிய கால வாழ்வை அவர் "சுவையிலாப் பேதை வாழ்வு" என்றே கூறுகிறார். "மறக்கிவல் வலைப்படுத்திக் குமைத்திட்டுக் கொன்றுண்பர், அறப் பொருளை அறிந்தோர் இவை மென்ன உலகியற்கை," என்று நம்மாழ்வார் பகைத்ததைப் போல, சுந்தரரும் மானிட வாழ்க்கையை ஒரு பொருளாக மதித்தால் 'கண்கள் நீர்பில்கும்' என்கிறார்.

சுந்தரருடைய மனம் சிற்றின்பத்தில் சென்றதில்லை என்பதற்குச் சிறந்த உதாரணம் ஒன்று கூறுவோம். அவர் திருவாரூரி லிருந்து தல யாத்திரையாகத் திருநாட்டியத்தான் குடிக்குச் சென்றனர். அங்கிருந்த கோட்புலி நாயனர் என்னும் தொண்டர் சுந்தரருக்கு விருந்து செய்வித்துத் தமது புதல்வியர் சிங்கடி, வனப்பகை என்ற இருவரையும் அவருக்கு மனைவிகளாக்க வெண்ணினார் சுந்தரர் சிற்றின்பப் பிரியராக இருந்திருந்தால் அவர்களை ஏற்றுக் கொண்டிருப்பார். ஆனல் அவர், "இவர்கள் எனக்குப் புதல்விகள ஆவார்கள்," என்று கூறி அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தனுப்பினர். அன்றியும் சில பதிகங்களின் கடைக்காப்புச் செய்யுட்களில் தம்மைச் 'சிங்கடியப்பன்' 'வனப்பகையப்பன்' என்று கூறிக் கொள்வதும் அவரது உள்ளப்பூண்மையை வலியுறுத்தும். சுந்தரருடைய சரித்திரத்தை விரிவாகக்கூறிய சேக்கிழாரும், அவரை ஒரு பாசுரத்தில் "மேருவரையின் மேற்பட்ட தவத்தான்" என்று சிவபிரானை கூறியருளியதாகச் சொல்லியிருக்கிறார். என்றும் முக்தரான ஒரு ஜீவனை

தொடர்ச்சி 4ம் பக்கம்

## பிரார்த்தனை

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில்கொண்ட வெம்பெருமான் திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய் யானிதற் கிலனோர் கைம்மாறே.

— மணிவாசகர்.

## வரவு செலவுத் திட்டம்

### 4 மாதத்திற்குத் தயாரிப்பு

இப்போது அரசாங்கசபை கலைக்கப்பட்டிருக்கிறது அரசாங்கசபை சென்ற ஆண்டில் தீர்மானித்த வரவு செலவுத் திட்டம், வருகிற அக்டோபர் மாதத்துடன் முடிவெய்துகிறது. ஆகவே அக்டோபரிலிருந்து, புதிய பாராளுமன்றம் கூடி அரசியலை நடாத்தும்வரை இலங்கையின் பரிபாலனம் நடப்பதற்கு வேண்டிய வரவு செலவுத் திட்டத்தை இப்போதுள்ள மந்திரிசபையினர் தயாரித்து வருகின்றனர். அக்டோபர் மாதம் தொடக்கம் ஜனவரி ஈறுக நாலுமாதத்துக்கே இந்த வரவு செலவுத் திட்டம் செல்லுபடியாகும். மிகவும் ஆவசியகமானவையெனக் காணப்படும் செலவினங்களே இத்திட்டத்திற் சேர்க்கப்படுமாம்.

மந்திரிசபையில் அத்திட்டத்தை நேற்றுப் பரிசீலனை செய்து தேசாதிபதியின் அங்கீகாரத்துக்கு அனுப்பியுள்ளனர்.

## அடையாளங்கள்

### 24 வகுக்கப்பட் டிருக்கின்றன

வருகிற பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகர்க்கு அளிக்கப்படும் அடையாளங்கள் 24 வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் அபேட்சகராய் வருவோர் தமக்கு விரும்பியதை வகுத்துக்கொள்ளலாம். ஆனல் இரு அபேட்சகர் ஒரே அடையாளத்தை விரும்பினல், தேர்தல் உத்தியோகத்தர் திருவுளச் சீட்டுப் போட்டு, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அடையாளங்கள் வருமாறு: யானை, துவிச்சக்கரம், வீடு, குடை, திறப்பு, மூக்குக்கண்ணாடி, பட்சி, வண்டிற் சில், மோட்டார்க்கார், வண்ணாத்திப்பூச்சி, மோட்டர்பஸ், கோப்பை, மணிக்கூடு, விளக்கு, கதிரை, மரம், அன்னுசிப்பழம், மேசை, புஷ்பம், ஆகாச விமானம், கண், காண்டி, கை, தராசு.

## 360,000 ரூபா நட்டம்!

### வெங்காயம் கடலில் வீசப்பட்டது

இப்போது இலங்கையில் வெங்காயம் மிகவும் தட்டுப்பாட்டில் இருக்கிறது. இறுத்தல் ஒன்று 40, 50 சதம் வரையில் விற்கிறது. காரணம் போதிய வெங்காயம் புற ஊர்களிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படாமையே; அப்படியிருந்தும் சென்றவாரம் 1450 தொன்நிறையுள்ளதும் 360,000 ரூபா பெறுமதியானதுமான வெங்காயம் கடலிற் கொட்டப்பட்டதாம்.

குறித்த வெங்காயம் எகிப்திலிருந்து இங்கு ஓர் கப்பலில் சென்ற 7-7-47 இல் வந்தது. இதில் 250 தொன் வெங்காயம் இலங்கை அரசாங்கத்துக்கெனவும், மீதி, தனி வர்த்தக சமுதாயங்களுக்கும் வந்தனவாகும்.

இந்த வெங்காயங்கள் அழுகிவிட்டபடியினல், கப்பற் கம்பனிக்காரர்கள் அரசாங்கத்தையோ, குறித்த வியாபாரிகளையோ கலந்தாலோசிக்காமல் கடலில் வீசிவிட்டார்களென்றும் இது விஷயமாக இலங்கை உணவுப் பகுதி அதிகாரி ஸ்ரீ கே. ஆழ்வாப்பிள்ளை மிகவும் கண்டிப்பான நடைவடிக்கை எடுத்துவருகின்றாரென்றும் அறிகின்றோம்; மேற்படி வெங்காயம் கடலில் வீசப்பட்டபின், அதன் ஓர் பகுதி, திரையால் கரைக்குச் சேர்க்கப்பட்டதாம்; அவற்றைச் சிலர் பொறுக்கி ஊரவர்களுக்கு இறுத்தல் ஒன்று 25 சதம், 30 சதமாக கொழும்பில் விற்கின்றனர் என்று தெரிகிறது.

இப்படியாக இவ்வளவு வெங்காயத்தையும் கடலில் வீசியெறிந்ததுபற்றி ஓர் விசாரணை நடத்தித் தமக்குநட்டஈடு தரவேண்டுமென்று கொழும்பு வர்த்தகர்கள் அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறார்கள்,

## மிஸ்ரர் குணசிங்ஹா

இலங்கைத் தொழிற்கட்சித் தலைவரான மிஸ்ரர் ஏ. ஈ. குணசிங்ஹா கொழும்புமத்தியபகுதித்தொகுதிக்கு தொழிற் கட்சியின் சார்பாக ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிறார். இவருக்கெதிராக ஜனுப் ரீ. பி. ஜயா (ஐ. தே. க.), மிஸ்ரர் பீற்றர் கெனமன் (சமதர்மக் கட்சி என்பவர்களுடன் ஓர் சமசமாஜக் கட்சி யங்கத்தவரும் ஸ்ரீமதி அஷ்ரப் என்னும் ஓர் முஸ்லிம் பெண்ணும் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஞு
ஆடிமீ ௬ ௨ செவ்வாய்க்கிழமை

## தேர்தற்காகிய அடையாளங்கள்

சமீபத்தில் நிகழவிருக்கும் இலங்கைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகளைத் தேர்தல் செய்யும்போது, முந்திய அரசாங்க சபைப் பிரதிநிதிகளைத் தெருங் காலத்திலே கைக்கொண்ட நிற பேதத்தைத் தவிர்த்து, சில அடையாளங்களைக் கொண்டு புதிய முறையில் தேர்தல் நிகழுமென்பது இங்குள்ளார் சில மாசங்கட்கு முந்தியே அறிந்த விஷயமாகும். இவ்வடையாளமாகவுள்ள படங்கள் பின்வருவனவாம்: கை, வண்டிச்சில்லு, "பஸ்", கோப்பை, திறப்பு, குடை, துவிசக்கரம், மணிக்கூடு, மூக்குக் கண்ணடி, தீபம், மேசை, ஒருமரம், பூ, ஆகாய விமானம், அன்னதாளம்பழம், நாற்காலி (கதிரை, வீடு, யானை, நட்சத்திரம், கரண்டி, கண், தட்டோடு கூடிய தராசு, ஒரு பறவை, வண்ணத்திப் பூச்சியென இருபத்தினாற்கு பொருள்களாம்.

இந்த அடையாளங்களைக் குறிக்கும் பொருள்கள் ஏதும் ஒவ்வொரு கருத்துப் பற்றித் தெரிவு செய்யப்பட்டனவோ, இல்லையேல் மனத்தி லெழுந்தவாறு குறிக்கப்பட்டனவோ, இவற்றைத் தெரிந்து வெளியிட்டவர் ஒருவர் இருவரோ, இல்லையேற் பலர்கூடி யோசித்ததன் பயனோ; இப் பொருள்கட்கு ஏதும் தத்துவார்த்த முண்டோ என்பதொன்றும், எமக்கு மாத்திரமல்ல இங்குள்ள மக்களுட் பெரும்பாலினர்க்குப் புலப்படவில்லை; இப்பொருள்களுட் பல இவ் விலங்கைக்குச் சிறப்பாகவுள்ளனவோ என்று ஆராயப்புகின், இவ்வடையாளங்களுளொன்றாகிய யானை யொன்றைத்தான் ஒரு அளவிற்கு இலங்கைக்குச் சிறப்புடைய பொருளென்று சொல்லலாம்; யானை வேறுநாடுகளிலு முண்டு; யானையும்பௌத்ததாகோபமும்,தென்னையும் சேர்ந்து இந்த இலங்கையில், விசேஷமாகச் சிங்கள நாட்டிலே ஈழத்தின் அடையாளமாக உபயோகிக்கப்படுவதுண்டு; யானையும் இலங்கையில் மாத்திரமன்றி பிரமதேசம் முதலாம் சிலதேசங்களிலும் காணப்படுவது.

ஏனைய அடையாளங்களுட்கை இலங்கை மக்களுக்குமுண்டென்பது மெய்; வண்டிச் சக்ரம்; மேசை, திறப்பு, வீடு, தராசு என்னுமிவைகள் இங்கும் ஆக்கப்படுவன; அன்னதாழம்பழம், பூ, குருவி, வண்ணத்திப் பூச்சி இலங்கையிலு முண்டு; ஆனால் பஸ்ஸின் யந்திரம் முதலியனவும், குடை, துவிசக்கரம், மூக்குக் கண்ணடி, மணிக்கூடு என்னுமிவைகள் அந்நிய நாட்டிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்படுவன.

இத் தேர்தல் அடையாளங்களுள் இங்குள்ள நால்வகைச் சமயத்தினர்க்காகிய பொருள்களின் படமெதுவுமில்லாமற் போனமை மிகவும் நன்றும்; சமயத்திற்குரிய அடையாளங்கள் மாத்திரமல்ல, இலங்கையி லுள்ள சாதியினர்க்காகிய விசேஷ பொருள்களும் இத் தேர்தல் அடையாளமாகத் தோன்றாமை நன்றேயாகும்; இவைகளையெல்லாம் உற்றுநோக்குமிடத்து இத் தேர்தலடையாளங்கள் மேலான பொது நோக்குடன் தேர்ந்தெடுக்கப்பட்டனவென்பது யூகிக்கக் கிடக்கின்றது.

### சுதந்தரோதயம்

சென்ற வெள்ளிக்கிழமை பிரிடிஷ் மன்னர்பிரான் இந்திய சுதந்திர மசோதாவுக்குத் தமது அங்கீகாரத்தையளித்துவிட்டார். இனி, பாகிஸ்தான், இந்தியா என்ற இரண்டு டொமினியன்களுக்கும், சட்டபூர்வமாக அதிகாரத்தை மாற்றும் கிரியை வருகிற ஆகஸ்டுமாதம் 15-ம் திகதி நிகழும். இந்தத் தினத்தை எவ்வாறு கொண்டாட வேண்டுமென்பதைப் பற்றி காங்கிரஸ, லீக் அதிகாரபீடங்கள் ஆலோசித்து வருகின்றன.

### மகோற்சவம்

புராதன புண்ணிய தலமாகிய மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நாளைத்தினம் (23-7-47) கொடியேறி மகோற்சவம் நடைபெறும்

### ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள் பிரிவு

உயர்திரு சுவாமி விபுலானந்த அவர்களின் பிரிவுச் செய்தி இங்குள்ள மக்களுட் பெரும்பாலார்க்கு, வெள்ளிடி வீழ்ந்தவாறு செவியிற் புகுந்தது. சிலகாலமாகச் சுவாமியவர்கள் தேகநலக்குறைவோடிருந்தன ரேனினும், அவர் தம்முடைய தூய முயற்சிகள் சஞ்சார மென்னுமிவைகளில் ஈடுபட்டிருந்ததினால், சுவாமிகளின் பிரிவு இப்படிச் சடுதியில் நேருமென அவருடைய அபிமானிகளெவரேனும் எதிர்பார்த்திருந்திலர்; சில வாரங்கட்கு முந்தயே சுவாமிகள் தாம் பல வருடங்களாய்ச் சிறந்த ஆராய்ச்சி செய்து எழுதிய யாழ் நூலை அச்சிடுவிக்கும் நோக்கமாக தென்னிந்தியாவிற்குச் சென்று மீண்டார்; நேற்றிருந்தார் இன்றிருத்தல் நிச்சயமல்ல வென்பதை உணர்ந்திருந்தும், பெரியார் பிரிவைக் கேட்ட மாத்திரத்தே எல்லாவற்றையும் மறந்து துயருறுதல் மானுட சுபாவமாகும்; சுவாமிகள் சென்ற சனிக்கிழமை யிரவு கொழும்பிலுள்ள ஒரு வைத்தியசாலையிற் பரிகரிக்கப்படும்போது இவ்வுலக வாழ்வை யொருவினர்; அவருடைய பூதவுடல் சமர்த்தியின்பொருட்டு அவரது சந்மபூமியாகிய மட்டக்களப்பிலுள்ளதும், சுவாமிகளாலேயே ஸ்தாபிக்கப்பட்டதுமான சிவாநந்த வித்தியாலயத்திற்குக் கொண்டு போகப்பட்டு, அங்கே பல சுற்றமித்திரர் அபிமானிகள் மாணக்கர் முதலானோர் சமுகத்தில் சமாதி வைக்கப்படலாயிற்றென அறியலானேம்; கற்றாரைப் பிரிதலே யரிதாக், கற்றவரும் பேராசிரியரும் துறவியுமாகிய சுவாமிகளின் பிரிவினால் நேர்ந்த துயர் இலகுவில் ஆறுவதொன்றன்று; சுவாமிகள் போன்ற பெரியார்கள் "வினைப்போகமே யொரு தேகங் கண்டாய் வினைதா னொழிந்தால் தினைப்போதும் நில்லாது கண்டாய் ... ..."என்றங்கு தங்கள் சத்கருமங்கள் முடிவுற்றவுடனே இம் மண்ணுலகை விட்டகல்வரென்பது உண்மை யல்லவா! சுவாமிகளின் ஆன்மா சாந்தியடைக.

(சுவாமிகளின் அரும்பெரும் வாழ்க்கை வரலாறு பின்னர் வெளிவரும்.)

# பர்மா அட்டூழியம்!

## ஆங்ஸேன் உட்பட மந்திரிகள் கொலை



பர்மா பூரண சுதந்திரமடையவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே, உலகில் முன்னொருபோதும் நிகழாத பயங்கரமான ஓர் அட்டூழியம் அங்கே நிகழ்ந்திருக்கிறது.

சென்ற சனிக்கிழமை பர்மாப் பிரதமரான ஆங்ஸேன் சேனாதிபதியும் அவருடைய சகாக்களான ஏனைய மந்திரிகளும், தமது காரியாலயத்தில் கருமார்த்தமாக இருந்து பேசிக்கொண்டிருந்தபோது, ஆயுதபாணிகளான சிலர் தோன்றி, காரியாலயத்துட் புகுந்து அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு மாயமாய் மறைந்துவிட்டனர். இறந்த மந்திரிகள் பின்வருவோராவர்:

ஆங்ஸேன்: பிரதமர்.
யூ. பா வீன்: வர்த்தக மந்திரி.
அப்துல்றஸாக்: கல்வி மந்திரி.
மாங்பாகாயிங்: கைத்தொழில் மந்திரி
தக்கின்மியா: நிதி மந்திரி
ஓஹன்மாங்: போக்குவரத்துப் பகுதிக் காரியதரிசி
யூ பா. கோ விளம்பர மந்திரி.

இந்தப் பயங்கர அட்டூழியத்தைச் செய்தவர் யார் என்பது இன்னும் திர்க்கமாகத் தெரியவில்லை ஆங்ஸேனுக்கு விரோதமான சமதர்மிகள் இதனைச் செய்தனரோ என்று முதலிற் சந்தேகிக்கப்பட்டது. ஆனால், சமதர்மக்கட்சித் தலைவர்கள், இந்த இழிவான செயலைக் கண்டித்து அறிக்கைவிடுத்திருக்கிறார்கள். இவ்விஷயமாக, ஜப்பானிய ஆக்கிரமிப்புக் காலத்தில் சிறையாக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள யூ ஸா என்னும் பிரமுகரை பர்மிய அதிகாரிகள் சிறையாக்கியுள்ளனர்.

# இலங்கையின் தேசீயக்கொடி

## அது எல்லார்க்கும் பொதுவானதாகவேண்டும்

இலங்கை ஓர் சாகியத்தார் சமுகத்தார்க்கு மாத்திரம் உரியதல்ல. இங்கேவாழும் சகல மக்களுக்கும் பொதுவானது: ஆகவே, இங்கே ஓர்தேசியக்கொடியை உருவாக்கும் விஷயத்தில் சிங்களத் தலைவர்கள் சர்வாதிகாரத்துவத்துடன் தம சாதியக் கொடியாகிய சிங்கக்கொடியை நிர்மாணிக்கக்கூடாது என்று சென்ற 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் இந்துமகாசபை மண்டபத்தில் நிகழ்ந்த கூட்டத்திற் பலர் வற்புறுத்திப்பேசினர். இக்கூட்டத்துக்கு நகரசபையங்கத்தவர் திரு. R. C. மன்மதராயன் தலைமை வகித்தார் தேசீயக்கொடி விஷயமாகப் பலர் பேசியபின பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறியன.

1 இலங்கையின் அரசாங்க நிலையங்களில் ஓர் தேசியக்கொடியை இலங்கை யரசாங்கம் ஆரோகணிப்பதென்றும், அது சிங்களர்க்குரியதாகிய சிங்கக்கொடியே யென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது இந்தச் சிங்கக்கொடி தேசீயக்கொடியாகமாட்டாது. ஆகையினால் இலங்கையில் உள்ள தமிழர் முஸ்லீம்கள் என்பவர்களும் மதிக்கத்தக்கதாக, அக்கொடியில, யாழ், பிறை என்பவற்றின் சின்னங்களையும் ஒவ்வோர் பக்கத்தில் அமைத்துச் சிங்கக்கொடியிற் பொறிக்கவேண்டும என்று இச்சபை தீர்மானிக்கிறது.

2 சைவமக்களுடைய புண்ணிய க்ஷேத்திரமான கதிர்காமத்தின் பரிபாலனத்தை இலங்கைச் சைவமக்களிடமே ஒப்படைத்தல் ஆவசியகமாகும் என இச்சபை கருதுகிறது

இத்தீர்மானங்கள் சம்பந்தமாக அதிகாரிகளைச் சந்தித்து ஏற்ற நடவடிக்கைகளை ஆற்றத் திருவாளர்கள் ஸி. நாகையா, R. C. மன்மதராயன் என்பவர்கள் உட்பட நால்வரைக் கொண்ட ஓர் தூதுக்கோஷ்டி தெரியப்பட்டது.

### நன்கொடை

சென்னைகீழைப்பாக்கம்டக்ரர்காசிநாதனவர்கள், காலஞ்சென்ற தமது தந்தையார் இராமலிங்க முதலியாரவர்களின் ஞாபகார்த்தமாகவும் தனவந்தருமாக விளங்கியவருமாகிய யாழ்ப்பாணம் சித்தங்கேணி திரு. U. சபைதிமுத்து அவர்களின் பதினறும் வருஷாப்தியம் சென்ற ஆடிப்பூரத்தன்று (22 7-47) நிகழ்ந்தபோது, அவரது ஞாபகார்த்தமாக, யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபைக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபா 10 வரப்பெற்றும்.

மனேஜர், இந்துசாதனம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

திண்ணைவேலி கந்தையா மகள் பகவதியின் ஆஸ்திக்கு
திண்ணைவேலி சின்னத்தம்பி கந்தையா
விண்ணப்பகாரன்

இல. 292 G

எதிராக

திண்ணைவேலி: 1 சின்னத்தம்பி கந்தையா மகள் பகவதி
சிறப்பிட்டி: 2 விநாயர் நாகமுத்து
எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 292 G ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ந் திகதி (21 8-47) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திண்ணைவேலியிலுறை 'இரட்டைப்பனையடியும் கோவிற்காடும் நிலப்பரப்பு ஆறேகால் ($6\frac{1}{4}$ ம்) மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு சுப்பிரமணியம்பெண் வள்ளியம்மையின் உருமைக்காறருக்குரிய ஆதனம், வடக்கு வள்ளியம்மையின் உருமைக்காறருக்குரியவைஒழுங்கையும்ஆறுமுகம்கந்தையாவின்ஆதனமும். மேற்குகந்தர் பெண் இலட்சுமிக்கும் பங்காளருக்கும்ஆறுமுகம்கந்தையாவுக்குமுரிய ஆதனமும்ஒழுங்கையும். தெற்கு கார்த்திகேசு தம்பாபிள்ளையின் ஆதனம், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer
தெல்லிப்பழை
12—7—47.

M 89 22-7-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்களுக்கோர் வேண்டுகோள்

## இன்று வேண்டியது ஒற்றுமை

### அஃதின்றேல் விளைவது அநர்த்தம்

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டு முன்றிலில் நிகழ்ந்த தமிழக்காங்கிரஸ் கூட்டத்தில், ஸ்ரீ எஸ். ஜே. வி செல்வநாயகம் கே. ஸீ. கூறிய மொழிகள், பொன்னே போற் போற்றத்தக்கனவெனலாம். தமிழ்க் காங்கிரஸின் கொள்கைகளில் அபிப்பிராயபேதங் கொண்டிருப்பவர் தாமும், ஸ்ரீ செல்வநாயகத்தின் அரசியல் ஞானம் பொதிந்த பேச்சைப் பாராட்டாமலிருக்க முடியாது. இந்த நாட்டின் முன்னேற்றத்துக்குச் சிங்களர், தமிழர் முஸல்மான்கள், பறங்கியர் என்னும் சகல சாதியாரதும் பரஸ்பர ஒத்துழைப்பும் பரஸ்பர சேவையும் இன்றியமையாததாகும்; ஓர் சமூகத்தை நசுக்கித்தள்ளி, அதன் பயனாக மற்றும் சமூகம் முன்னேற நினைப்பது தேசாபிமானத்தின்பாற் பட்டதாகாது; ஆனால் ஒத்துழைப்பது என்பது ஆண்டான்—அடிமை என்னும் மனோபாவம் கொண்டிருப்பவர்க்கிடையே ஏற்படமுடியாது; ஒத்துழைப்பு சமத்துவத்தை, சகோதரத்துவத்தை ஆதாரமாகக் கொள்ளவேண்டும் அப்படியான ஒத்துழைப்பை நாம் சிங்கள மக்களுக்கும், சிங்களத் தலைவர்களுக்கும் கொடுக்கத் தயார்; எங்கள் நாட்டின் பூரண சுதந்திரத்துக்கு நாமும் சுதந்திரப் போரின் முன்னணியில் நிற்கத்துடிதுடிக்கிறோம். ஆனால் இன்று அதிகாரம் படைத்துள்ள சிங்களத் தலைவர்கள் நாம் கொடுக்கவிருக்கும் ஒத்துழைப்பை உதறித்தள்ளி, கேவலம் அடிமைகள் எஜமானன் விஷயத்தில் எத்தகைய மனோபாவம் கொண்டிருக்க வேண்டுமோ, அத்தகைய மனோபாவத்தை (அடிமைத்தனத்தை ஆதாரமாகக் கொண்ட மனோபாவத்தை) நாம் கொண்டு தாம் மனமிரங்கித் தரும பதவிகளைப் பெறவேண்டும் என்று அதிகார தோரணையிற் பேசிவருகிறார்கள். இதற்கு அஞ்சித் தமிழ்மக்கள் தம்மானத்தை விற்க முடியாது" என்று ஸ்ரீ செல்வநாயகம் கூறியுள்ளார். ஸ்ரீ செல்வநாயகத்தின் கூற்றை ஆட்சேபிக்கும் தமிழ்மகன் எவனும் இந்த இலங்கையில் உருக்கமாட்டான் என்பதே எனது அபிப்பிராயம்.

○

### கொள்கையில் வித்தியாசம் இல்லை

ஸ்ரீ செல்வநாயகம் அன்று விடாக்கியானம் செய்துள்ள கொள்கைதான் தம்முடையது என்று தமிழ்க் காங்கிரசிற்கு விரோதமாக நிற்கும் பிரமுகர்களும் கூறுகின்றனர் எனவே, இந்த இரு சாரார்க்குமிடையேயுள்ள அபிப்பிராயபேதம் இப்போது மிகவும் குறைந்துகொண்டே வருவது ஓர் சுபசகுனம் என்றே கருதுகின்றேன். தமிழ்க் காங்கிரஸ் "வகுப்புவாத" ஸ்தாபனமாயிருக்கலாம். ஆனால் அதன "வகுப்புவாதம்" இலங்கைவாழ் தமிழ்மக்களை ஒற்றுமைப்படுத்துவதுடன் நின்றுவிடுகிறது. மேனாட்டுச் சிங்களர், கனாகாட்டுச் சிங்களர் என்று பரஸ்பரம் மாறுபட்டிருந்த சிங்கள மக்கள், சிங்கள மகா சபைமூலம் இன்று ஒற்றுமைப்பட்டிருக்கின்றனர் இலங்கைவாழ் முஸ்லீம்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்த இலங்கை முஸலிம்லீக் ஏற்பட்டிருக்கிறது. அதே போல பறங்கியர்சங்கம் முதலிய சாதி-அரசியற் சங்கங்களும் உள. இவையெல்லாம் ஒன்றுசேர்ந்ததே ஐக்கிய தேசீயக் கட்சி என்க. இந்த வகுப்புவாத ஸ்தாபனங்கள் யாவும் மேற்படி ஐக்கிய தேசீயக் கட்சியில் ஒன்று அங்கத்துவம்பெற, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ மாத்திரம் அதில் ஓர் அங்கத்துவம் பெறாமலிருப்பது உண்மையில் வருத்தத்துக்கிடமான ஓர் விஷயமாகும். இலங்கையிலே சமதர்மிகளின் செல்வாக்கு ஓங்காமலிருப்பதற்கே, மிஸ்டர் சேனநாயக்கா இந்த ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தினார். அந்த முன்னணியிலே தமிழ்க் காங்கிரசும் சேர்ந்திருந்தால் இன்று இந்த நாட்டில் தலைவிரித்தாடும் வகுப்புவாதப் பைசாசம் எப்போதோ குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருக்கும். எரியுங் கொள்ளியை ஏறத் தள்ளுபவன் போல, ஸோல்பெரி விசாரணைச்சபையின் தீர்ப்பினால் மனமுடைந்திருந்த தமிழ்க் காங்கிரஸ ஸ்தாபனத்தை, ஐ. தே. க. அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மிஸ்டர் சேனநாயக்கா ஏளனம்செய்து பேசியதும் ஓர் துக்ககரமான விஷயம். தமிழ்க் காங்கிரஸவாதிகள் தேர்தலில் வெற்றிபெற்று வந்தால் அவர்களை நாம் மந்திரசபையிற் சேர்த்துக்கொள்ளமாட்டோம் என்று மிஸ்டர் சேனநாயக்கா அன்று சர்வாதிகாரத்வனியுடன் கூறியதால், இலங்கைமக்கள் அனைவர்க்கும் தனிப்பெருந் தலைவனாக இருக்க வேண்டிய அவர், இன்றுமுதலாம் நம்பர் வகுப்புவாதி எனப் பெயர் எடுத்துவிட்டார்

○

### தமிழ்மக்களின் எதிர்காலம்

இன்று தமிழ்மக்களின் நிலைமையென்ன? இவர்களின் எதிர்காலம் என்ன? என்பவற்றைப்பற்றி நம்முடைய தலைவர்கள் என முன்வந்திருப்போர் ஆலோசிப்பதாகத் தெரியவில்லை. தமிழ்மக்களாகிய நாமோ மிகவும் சிறுபான்மையினர். அப்படிப்பட்ட எமக்குள்ளே ஒற்றுமையில்லாது நாலு திசைகளிலும் சிதறுண்டால் எமக்குக் கதி என்ன? எங்கள் தலைவர்கள் என இன்று முன்வந்திருப்போர் முதலில் தமக்குள்ளே ஒற்றுமை கொண்டால் என்ன? எமக்குள்ள பிரதிநிதிகள் ஆகமிஞ்சினால் 20 பேர்மாத்திரமே பாராளுமன்றத்தில் இருப்பர். இந்த இருபது பேரும் ஒரே நோக்கங் கொண்டு ஒரே கொடிக்குக்கீழ் நின்றால் என்ன? இவ்வளவுபேரும் பூரண ஒற்றுமைகொண்டு நின்றால், எங்கள் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். இச்சந்தர்ப்பத்திலே, இந்த நெருக்கடியான காலத்திலே மட்டக்களப்புத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர், இந்தியத் தமிழர் என்ற பேதம் ஆகாது. ஒரே கலை, ஒரே பாஷை, ஒரே நாகரிகம் என்பவற்றைக் கொண்டுள்ள நாம், வேற்றுமை கொண்டிருத்தல் முறையல்ல. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. தமிழ்மக்களாகிய நாம் எல்லாரும் ஏதோ ஒரு ஸ்தாபனத்திற் சேருவோம். எங்களுடைய ஒற்றுமையைக் குலைக்க, தேர்தற காலமும் சமீபித்துவிட்டது. ஆனால் காலம் போய்விடவில்லை. இப்போதுதானும் நம் தலைவர்களும் ஏனைய பிரமுகர்களும் ஒன்றுகூடி, எதிர்காலத்தில் எம் வாழ்க்கைக்கு ஆக்கம்தேட இன்றே முயற்சி செய்வார்களாக; தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியிற் சேர்ந்துள்ள தமிழ்த் தலைவர்களும், ஓர் வட்டமேசை மகாநாடு கூடி, தமிழ்மக்களின் எதிர்கால நன்மையைத் தேட முயற்சி செய்யவேண்டும். இந்த விஷயத்தில் சுயாபிமானமும், கௌரவமும் குறுக்கே நிற்கக்கூடாது; எங்கள் பழைய தலைவர்கள் துரதிர்ஷ்டவசமாகப் பரஸ்பரம் மாறுபட்டு நிற்கின்றனர் இவர்களை முதலில் மீண்டும் ஒன்று சேர்க்க வேண்டும். ஸ்ரீமான்கள் ஜீ ஜீ பொன்னம்பலம், அ மகாதேவா, எஸ் ஜே வீ. செல்வநாயகம், சு. நடேசன், சேர். வை. துரைசுவாமி ஆ வ குலசிங்கம், க. கனகரத்தினம், வீ. வீரசிங்கம், கா. சண்முகம், சு பேரின்பநாயகம், ஜே. தியாகராசா, வி சுந்தரலிங்கம் டீ. ராமலிங்கம், சு. இராஜரத்தினம், ஆர். ஆர். நல்லையா, க பொன்னம்பலம், இ. சிவகுருநாதர், வி. ரசநாதன், எஸ் எம். அபூபக்கர், வண பிதா. எமிலியானஸ்பிள்ளை, சைவப் பெரியார், சு. சிவபாதசுந்தரம், எஸ். ஆர். கனகநாயகம், வீ. நல்லையா, சாம் சபாபதி வி எஸ். கார்த்திகேசு ஏம் ஆர். நாராளசிங்கம், C. R. தம்பையா, V குமாரசுவாமி என்னும் இவர்களை ஒன்று கூட்டவேண்டும் இந்தச் சமயத்திலே, வடமோடியுந் தென்மோடியுஞ் சேர்ந்தாலும் மேலாம். ஆனால் இவர்களைச் சேர்ப்பது அரிது எனலாம், ஆனால் எங்கள் தமிழ்நாட்டிலே கட்சிபேதமற்ற பெரியர் பலர் உளர். இவர்கள் மனம் வைத்து உழைத்தால் இது இயலாத விஷயமல்ல. இளைப்பாறிய எம் மாகாணத்தலைவர் திரு. வி. குமாரசுவாமி முடிக்குரிய [illegible] சுவாமிப்பிள்ளை [illegible] ஜேம்ஸ் மேதர் என்னும் பெரியார்கள் இம்முயற்சியில் ஈடுபட்டால் நிச்சயமாக ஒற்றுமை ஏற்படும் என்று எதிர்பார்க்கலாகும். தமிழ்மக்களை ஓர் பேராபத்துச் சூழவிருக்கிறது. இதிலிருந்து நாம் ராஜதந்திரத்துடன் தப்பி எம் சுயமரியாதையையும், எம் பிற்கால சந்ததியின் வாழ்க்கையையும் பாதுகாக்கவேண்டும். தமிழ்க் காங்கிரஸில் பிழை இருத்தல், அதனை நாம் எல்லாரும் சேர்ந்து திருத்துவோம்: அல்லது எல்லாரும்சேர்ந்து அழிப்போம். அதற்கு முதலில் எமக்கிடையே பூரணமான ஒற்றுமை வேண்டும்: அதற்குத் தலைவர்களதான வழிகாட்டவேண்டும்

○

### ஆபத்து என்ன?

ஓர்காலத்திலே சிங்களப்பாஷையில் சரி ஆங்கிலப்பாஷையில் சரி, சிங்கள மக்களால் பத்திரிகைகள் வைத்து நடத்தப்படவில்லை, இன்று நிலைமை மாறிவிட்டது. 25 ஆண்டுகளின் முன் தவர்கள் இருந்த நிலைமைக்கு நாம் வந்துவிட்டோம். அவர்கள் மேலோங்கிவிட்டனர். இன்று தினசரிப்பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளும் சாதாரணச் சிங்களக் குடியானவன வீட்டிற் காணலாம் இப்பத்திரிகைகள் பலவற்றில் வெளிவருவது என்ன? சின்னத்தனமான வகுப்புவாதக் கட்டுரைகள்தான் இன்று ஐக்கியதேசியக் கட்சியின் பெருந் தூண்களாக விளங்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா, கொத்தலாவலை என்பவர்களால் வைத்து நடாத்தப்படும் பத்திரிகைகள், தமிழ் மக்களுக்கு விரோதமான கட்டுரைகளைப் பிரசுரித்த, சிங்களப்பாமரர்களின் மனத்தைத் தமிழ் மக்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்விக்கின்றன பொதுஜனங்களின் மனத்திலே வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிவிடுதல் மிகவும் லேசான காரியம் ஜின்னா பாகிஸ்தான் பெற்று இந்தியாவைத் துண்டாடி, தான் கவர்னர் ஜெனரலாக முடிசூட வந்ததும் இந்த வகுப்புவாதப் பிரசாரத்தால் தான் என்க. இன்று சிங்களமக்களிடையே சமதர்மிகளும், சமசமாஜிகளும் புகுந்து, சேனநாயக்கா, கொத்தலாவலைக் கோஷ்டியின் செல்வாக்கைக் குறைக்க, அந்த ஆபத்தினின்றும் தப்பி, தாமே சிங்கள ஜாதீய ரட்சகர் என்ற பெயரைப் பெறுதற்கு, இந்த வகுப்புத்துவேஷப்பிரசாரத்தைக் கொத்தலாவலைக் குழுவினர் இன்று கைக்கொண்டு வருகின்றனர். ஆனால் சிரங்கு முற்றிப் பவுத்திரமாகப் போகிறது. இந்த விஷமப் பிரசாரம் ஏற்கெனவே சிங்களர் மனத்திலே தமிழ்த் துவேஷத்தைக் கிளப்பிவிட்டது. இது ஓர் பெரிய ஆபத்து. தென் இலங்கையிலே எமது செல்வாக்கை நாம் இழக்காது, முந்திய நிலையை நாட்டவேண்டுமானால், நாங்கள் எங்களுக்கிடையிலே பூரணமான ஒற்றுமைகொள்ளவேண்டும், நாம் எல்லாரும் ஒன்றுசேர்ந்து, தமிழ்மக்கள் சிங்களர்க்கு விரோதமானவர்களல்லர், நாமும் அவர்களுடன் எந்த விஷயத்திலும், எமது சுயமரியாதைக்குப் பங்கம் விளைக்காதவகையில் ஒத்துழைப்போம்" என்பதைக் காட்டி அவர்களின் தலைவர்கள் செய்துவந்த விஷமப் பிரசாரங்களின் பயனை ஒழிக்கவேண்டும். நாம் எல்லாரும் ஒற்றுமைகொள்ளாவிட்டால், தமிழ்மக்களின் எதிர்காலம் என்னாகும் என்பதை எண்ணவும் ஏக்கம் கொடுக்கும். நம் தலைவர்கள் இதனைச் சிந்திப்பரா?

---

## உலகமே குடும்பம்

### நாமக்கல் கவிஞரின் செய்தி

தமிழ்நாட்டுத் தேசீயக் கவிஞர், நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை அவர்கள் சென்ற சனிக்கிழமை காலை இந்தியாவிலிருந்து கொழும்புக்கு வந்திருக்கிறார். கோட்டைப் புகைரத ஸ்தானத்தில் பல பிரமுகர்கள் அவரை வரவேற்றார்கள். திரு. பிள்ளை இலங்கையில் 3 வாரம்வரை தங்கியிருப்பர் என்றும், கூடிய சீக்கிரத்தில் யாழ்ப்பாணத்துக்கும் விஜயஞ் செய்வாரென்றும் அறிகிறோம்.

அவர் கொழும்பை யடைந்ததும் சில பத்திரிகை நிருபர்கள் அவரை யணுகிச் சம்பாஷித்தபோது, "உலகெலாம் ஒரே குடும்பம்; நிறத்துவேஷம், மதபேதம், பிரதேசவேற்றுமைகள் முதலியவை இல்லாமல், நாம் இருப்பின் உலகம் அதிக சந்தோஷமாகவும், சமாதானமாகவும் இருக்கும்" என்று கூறினர்.

---


# சிறந்த சங்கீதக் கச்சேரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கட்டடநிதியின்பொருட்டு

இந்திய தேசியராணுவப் பெண்கள்பகுதிக் காரியதரிசியாகிய

குமாரி S. N. சரஸ்வதியும்

அவர் கோஷ்டியினரும்

1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 7ந் சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில்

நீதியரசர் கௌரவ ஸ்ரீ

C. நாகலிங்கம் அவர்கள் அநுசரணையில்

சிறந்த சங்கீதக்கச்சேரி நடத்துவர்

சங்கீத ரசிகர்கள் இவ்வருந்தருணத்தை இழந்துவிடாது சமுகஞ்செய்க

Mis 88 18—1-8 47.


## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

நிகழும் சர்வசித்து ஆடி மீ ௬ உ (25.7-47) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் இலங்கையிலும் கிரமப்படி சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை நடத்தப்பெறும்.

### நிகழ்ச்சிகள்

மு ப. 10 தொடக்கம் பி. ப 2 வரை கடவுள் ஆராதனை, நால்வர் வழிபாடு, [illegible] பெரியபுராணம் - வெள்ளைச் சருக்கம், மாகேசுரபூசை. நீராவியடி திலகவதியார் மடத்தில் நடைபெறும்.

### பிரசங்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் வித்துவான் திரு ந சுப்பையாபிள்ளை அவர்கள் தலைமையில் சரவணை திரு. வே. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் "சுந்தரமூர்த்தி சுவாமிகள்" என்னும் பொருள்பற்றி மாலை 6.30 மணி தொடக்கம் ஓர் பிரசங்கஞ் செய்வார்

சை. சபைக் காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய உறவு ஏற்பட்டுவிடும்

## ஸ்ரீஜாத் கிரியின் நம்பிக்கை

### வரவேற்புபசாரத்திற் பிரசாரணம்

(நமது நிருபர்)

பிரிட்டிஷார்—இதுவரை இலங்கை இந்தியா என்னும் இரு நாடுகட்குமிடையே பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்ட ஏகாதிபத்தியவாதிகள் இன்னும் சில நாட்களில் பாரதவர்ஷத்தைவிட்டு நீங்கப்போகின்றனர். இலங்கையை விட்டும் அவர்கள் அகலுங்காலம் தூரத்தில் இல்லை. அப்படி ஏற்படும் காலத்திலே, இந்த இரு நாடுகளுக்குமிடையே சமாசம் ஏற்படுவது நிச்சயம்; அதற்கு எவ்விதமான சந்தேகமும் கிடையாது" என்றிவ்வாறு சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில், இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீஜாத் வி. வி. கிரி தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரக் கூட்டத்திற் கூறினர்.

இக்கூட்டம் இலங்கை இந்தியக் காங்கிரசின், யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனத்தின் ஆதரவிற் கூட்டப்பட்டது. ஸ்தாபனத் தலைவர் ஸ்ரீ ஏ. சீதாராமன் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். ஸ்ரீஜாத் கிரியுடன், இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவராயிருந்த ஜனாப் ஏ. அசீஸ், மூடிக்குரிய நியாயவாதி ஸ்ரீ த. முத்துச்சுவாமிப்பிள்ளை, இளைப்பாறிய மாகாணத் தலைவர் ஸ்ரீ வி. குமாரசுவாமி, டக்ரர் வி. கந்தையா, ஸ்ரீமதி P. S. பிள்ளை என்பவர்களும் மேடைமீது அமர்ந்திருந்தனர்.

ஸ்ரீ சீதாராமன் தமது தலைமையுரையில், இலங்கையில் இந்தியாவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீஜாத் கிரியை வரவேற்று, அவர் நியமனத்தினுல், இலங்கைவாழ் இந்தியரின் நிலை சுபீட்சமடையும் என்று தாம் பூரணமாக நம்புவதாகக் குறிப்பிட்டார்.

ஜனாப் ஏ. அசீஸ் பேசுகையில், இலங்கையில் இதுவரை ஆட்சிபுரிந்துவந்த சேனநாயக்காக்கோஷ்டி இந்தியர்க்கு விளைத்துவந்த அநீதியை விஸ்தாரமாக எடுத்துரைத்து, இலங்கைவாழ் இந்தியரின் நன்மைக்காக உழைத்த ஸ்ரீஜாத் எம். எஸ் ஆனேயின் சேவைகளைப் பாராட்டி, அவருடைய அடிச்சுவட்டை ஸ்ரீஜாத் கிரியும் பின்பற்றி இதுவரை தீர்க்கமுடியாதிருந்த இலங்கை-இந்தியப் பிரச்சினையைச் சமரசமாகத்தீர்த்து வைப்பார் எனத் தாம் நம்புவதாகக் கூறினுர்.

இதன்பின் பேசிய மூடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துச்சுவாமிப்பிள்ளை, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பண்டுதொட்டுப் பல நெருங்கிய தொடர்புகள் உண்டெனவும், இன்னும், யாழ்ப்பாணத்தில் உள்ள பல ஊர்ப்பெயர்கள் தென்னிந்தியப் பெயர்களையே கொண்டிருக்கின்றனவென்றும், யாழ்ப்பாண மக்கள் இந்திய மக்களை எப்போதுமே அந்நியராக மதிக்காது உடன்பிறந்த சகோதரர் எனவே மதித்து நடந்திருக்கின்றனர் என்றும் கூறி, இலங்கை-இந்தியர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கைத் தமிழ்மக்கள் தங்களாலான சகல உதவிகளையும் செய்வர் என்று குறிப்பிட்டார்.

திரு கிரி அடுத்ததாகப் பேசினுர். யாழ்ப்பாணத்தில் வதியும் இந்திய மக்களும் ஏனையோரும் தமக்குச் செய்த இந்த உபசாரத்துக்கு அவர் நன்றியறிதல் தெரிவித்துவிட்டுப் பின்வருமாறு பேசினுர்:-

'நான் எதிலும் நன்மையே காண்பவன்: ஆகவே, இலங்கை இந்தியர் பிரச்சினை மிகவும் சீக்கிரத்தில் தீர்க்கப்படும் என்று நான் மிகவும் திடமாக நம்புகிறேன். ஒருவன் திடநம்பிக்கையுடனும், மனத்தூய்மையுடனும் சுயநலமின்றி ஓர் கருமத்தில் ஈடுபடுவானுயின், அது நிச்சயம் சித்தியடையும்.

"நான் ஓர் காலத்தில் தீவிர கிளர்ச்சிக்காரனுக இருந்தேன். பின்னர் மாட்சிமை தங்கிய மன்னர்பிரானின் விருந்தாளியாக அவருடைய சிறைச்சாலையிலே பல் நெடுநாள் வசித்தேன். அதன்பின் சென்னை அரசாங்கத்திலே இரண்டுதரம் மந்திரியாக விருந்து இராச்சியபாரம் நிருவகித்தேன். அகில இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்தலைவராகவிருந்து தொழிலாளர் முதலாளிகட்கிடையில் சமாசம் ஏற்படுத்தும் தூதுவனுக விருந்தேன். கடைசியில் இந்திய அரசாங்கத்தின் தூதுவராக இங்கே வந்திருக்கிறேன். இப்படியாகப் பல்வேறு ஆசனங்களில் நின்று கருமம் ஆற்றியதை இன்று நினைக்கும்போது, மிகச் சுலபமான கருமம் கிளர்ச்சிசெய்பவருடையதே என்றும், மிகக் கஷ்டமான வேலை ஓர் இராஜரீகத்தூதுவனதே என்றும் நன்று உணர்கிறேன். தன் தேசத்தின் சார்பாக, அந்நியநாட்டிலே பொய்ப்பிரசாரம் செய்வதுதான் இராஜரீகத் தூதுவனின் கடமை என்று, இந்த இராஜரீகத் தூதுவர்க்கு வியாக்கியானம் செய்த ஒருவர் அன்றொருநாட் கூறினுர் ஆனுல், எங்கள் ஐயன், பொய்யறியா மெய்யன், சமர்மதி முனிவன் காந்தியடிகளின் ஆசீர்வாதம் பெற்று அன்பு, அகிம்சை, சத்தியம் என்ற கொள்கைகளில் திளைத்த எமக்கு பொய்ப் பிரசாரங்கள் வேண்டியதேயில்லை. சத்தியம், அகிம்சை என்பனவையே எங்களை வழிகாட்டும் விண்மீன்கள். நாடாசைபிடித்த மேனுட்டு வல்லரசுகளின் ராஜதந்திரம் எங்களுக்கு வேண்டியதேயில்லை எங்களுக்குச் சத்துருக்கள் யாரேனும் இருந்தால், அவர்களை நாங்கள் அன்பினுல் வெல்வோம். அவர்களுடைய மனத்தைப் புண்படுத்தும் வகையில் நாம் எவ்வகையான பேச்சும் செய்யக்கூடாது. நாம் உதார குணமுடையோமென்பதனை எங்கள்செயல்களினுல், நம் எதிர்க்கட்சியார்க்குக் காட்ட வேண்டும். எங்களுடைய நடவடிக்கை அன்பை, அகிம்சையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அதனுல் தனக்கு எவ்விதமான கெடுதிடம் இல்லையென்பதை எமது எதிர்க்கட்சி உணரச்செய்ய வேண்டும். அப்படி உணரும் பட்சத்தில், எங்கள் வேலை மிகவும் சுலபமாக முடிந்துவிடும்.

"இலங்கைவாழ் இந்தியராகிய உங்கள் கோரிக்கை நியாயமானது; நீதியானது; அன்பை அடிப்படையாகக் கொண்டது: ஆகவே நாம் இக்கோரிக்கையைப் பூர்த்தியாக்குவதில் நிச்சயமாய் வெற்றி பெறுவோம் அப்படியான நிலையைில், மற்றவர்களை நாம் ஏன் தூஷிக்கவேண்டும்; அவர்களுடைய மனத்தைப் புண்படுத்த வேண்டும்.

'இதுவரை இலங்கை இந்தியா என்ற இரு நாடுகளும், கேவலம் அடிமைகள் என்ற தன்மையிலேயே சமாசம் பேசின. இவை சமரசம் பேச திரைமறைவில் நின்ற மூன்றாம் பேர்வழி இச்சமாசப் பேச்சுக்களைப் பங்கப்படுத்தினர். அதிர்ஷ்டவசமாக அந்த மூன்றாம் பேர்வழியின் செல்வாக்கு முடிவடைகிறது. இன்னுஞ் சில தினங்களில் அவர் பாரதநாட்டை விட்டு மூட்டை முடிச்சுடன் கிளம்பப் போகிறுர். இலங்கையை விட்டும் அன்னுர் புறப்படுங்காலம் மிகவும் தூரத்தில் இல்லை. இந்த மூன்றாம் பேர்வழி அகன்றதும், இந்தியாவும் இலங்கையும் தாமாகவே ஒரு சமாசத்துக்கு வந்துவிடும்.

"புது டெல்கியில் சமீப காலத்தில் நிகழ்ந்த ஆசிய மகாநாடு, இந்தியாவையும் இலங்கையையும் மிகவும் அந்நியோன்னியமாக்கிவிட்டது. அம்மகாநாட்டுக்கு விஜயம் செய்த இலங்கைப் பிரதிநிதிகளின் அறிக்கையில் இருந்து நான் மனத்தைரியம் கொள்ளுகிறேன். அவர்களுடைய அறிக்கை அவர்களது சமரச மனுேபாவத்தை நன்கு காட்டுகிறது. ஆகவே இந்த இரு நாடுகளும் வரவிருக்கும் புதிய சகாப்தத்திலே, தோளோடுதோள்சேர்ந்து முன்னேறி வரும் என்று திடமாக நம்புகிறேன்.

"குறித்த ஆசிய மகாநாடு, இலங்கை மக்கள் மனத்தில் மாத்திரமல்ல, அகில ஆசியாவிலும் ஓர் புதிய விழிப்பை ஏற்படுத்திவிட்டது. [illegible] இக்கிடந்த [illegible] இன்று முன்னேறுகிறது; ஆசியாவைப் பிணித்திருந்த அடிமைத் தளைகள் படபடவென்று அறுந்து வீழ்கின்றன. இந்த ஆசியாக் கண்டத்திலே புத்துயிர் பெற்றுள்ள ஆசியாவிலே—நாமும் ஓர் அங்கமாய் இருப்பதுபற்றி ஒவ்வோர் இந்தியனும்—ஒவ்வோர் இலங்கையனும் பெருமிதம் கொள்ளவேண்டும், இப்படியான இந்த நிலைமையிலே இந்திய—இலங்கை உறவு ஏற்படுதற்கு அதிகம் கஷ்டம் இருக்கவேண்டிய நியாயம் எதுவுமில்லை.

"இந்தியா, இலங்கை என்னும் இரு நாடுகளும் இனித் தனித்து நிற்கமுடியாது; இந்தியா ஏற்கெனவே ஐக்கியதேச ஸ்தாபனத்திலே அங்கம் வகிக்கிறது. இலங்கையும் கூடிய சீக்கிரத்தில் அப்படியான அங்கம் வகிக்கப்போகிறது. எனவே இந்த இரு நாடுகள்மீதும் அகில உலகும் இனி நோக்கும். இவை எப்படித் தம் கருமத்தை நிருவகிக்கின்றன என்று அகிலமனைத்தும் அவதானிக்கப்போகிறது. எங்கள் நடவடிக்கையிலேயே எங்கள் எதிர்காலச் சிறப்பும் சுபீட்சமும் தங்கியிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே, இருநாட்டிலும் உள்ள அரசியல் வாதிகள் மிகவும் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வர் என்று எதிர்பார்க்கிறேன்.

"இன்று ஜனநாயக சகாப்தம் உலகெங்கும் ஏற்பட்டிருக்கிறது; இதுவரை ஒடுக்கப்பட்டிருந்தமக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறுர்கள். அவர்களை அடக்கி ஒடுக்கியாண்ட ஹிட்லர், முசோலினிக் கூட்டத்தினர் மண்ணோடு மண்ணுய்விட்டனர். ஏழை மக்கள் என இருந்தவர்களே உலக நிருவாகத்தை இன்று நடத்துகின்றனர். அவர்களே இன்று உலக எஜமானர்கள்; அவர்களே உலகின் உயிர்நாடி. அவர்களின் ஆதரவே எமக்கு வேண்டியது. இலங்கை இந்தியப் பிரச்சினை கூடிய சீக்கிரத்தில் தீர்க்கப்பட வேண்டுமென்பதில் இலங்கைப் பொதுஜனங்கள் சிரத்தை எடுக்கிறுர்கள் என்பதை நான் நன்கறிவேன். அந்தப் பொதுஜன ஆதரவுக்குப் பங்கம் தேடாதபடி இந்தியராகியநீவிர் நடக்கவேண்டும்.

"இனியும் நாம் இலங்கையர், இந்தியர் என்ற பேதம் பாராட்ட முடியாது. நாம் எல்லாரும் ஆசியாவின் சுதந்திர வீரபுதல்வர். இன்னும் சிலகாலத்தில் உலக அரசியலே ஏற்படப்போகின்றது இலங்கையர், இந்தியர், ஐரோப்பியர், அமெரிக்கர் என்ற பேதமின்றி, உலகமக்கள் அனைவரும் ஒன்றுகூடி, எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் ஓர் இறைவனின் சேயர் என்ற சங்கநாதம் முழங்குங்காலம் தூரத்தில் இல்லை."

டக்ரர் வி. கந்தையா, மிஸ்ரர் P. J. மத்தாய், திருமதி பீ. எஸ் பிள்ளை என்பவர்களும் பேசியபின் கூட்டம் இனிது நிறைவேறியது.

## கருங்காலிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நிகழும் சர்வசித்து வருஷம் ஆனி மாசம் ௩௦-ந் திகதி (14-7-47) திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் திருநாவுக்கரசு நாயனுர் புராணபடனப் பூர்த்தி விழா மேற்படி ஆலயத்தில் நடைபெற்றதும், ஆலய பரிபாலன நோக்கமாக சைவ அன்பர்களின் மகாகூட்டம் ஆரம்பமாயது. அவ்வமயம் திரு. பொ. நவரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவரவர்கள் திருநாவுக்கரசு நாயனுரது தொண்டின் திறனைப்பற்றியும் சைவ அன்பர்கள் அவ்வடியாரது வாழ்க்கையைப் பின்பற்றவேண்டிய அவசியத்தைப்பற்றியும், பண்டைக்காலத்தில் ஆலயங்களிலே புராணங்கள் மூலமாக சைவ அன்பர்களுக்கு அறிவூட்டி வந்த பெருமைகளைப்பற்றியும் விரித்துரைத்தனர். அதன்மேல் பண்டிதர் திரு. சு. இராமசாமி அவர்கள் ஆலய பரிபாலனத்தின் அவசியத்தைப்பற்றியும், ஆலய வழிபாடு செய்வோர் முகாமைக்காரருடன் ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும், ஆலயங்களிற் செய்யவேண்டிய திருத்தங்களைப்பற்றியும் எடுத்துரைத்தார். பின்னர் ஆலயத்தின் பரிபாலன அறிக்கையும், வரவு செலவுக் கணக்குப் பத்திரமும் வாசிக்கப்பெற்றன. ஈற்றில் தலைவர் துறிப்புரையுடனும் அத்தியட்சகரின் நன்றிகூறுதலுடனும் கூட்டம் இரவு 9 மணியளவில் முடிவுற்றது.

—கடித.

## சர்மயோகிசுந்தரர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

உலகப்பாசங்கள் ஒருபோதும் பந்தப்படுத்தமாட்டா. பரவையாருடனும் சங்கிலியாருடனும் சுந்தரர் வாழ்ந்த வாழ்க்கை "பன்னுளும் பயிலயோக பரம்பரை"யேயாகும். தந்திரிகர்களிடையேயும் சில வைஷ்ணவர்களிடையேயும முறையே காணும் பைரவ-பைரவி, வைஷ்ணவ-வைஷ்ணவி சம்பந்தத்தையும் இங்கு ஒப்பிடுக.

யாக்கை நிலையாமையையும் செல்வம் நிலையாமையையும் பலபடியாகப் பேசிய சுந்தரர் "மானுடப்பிறவி வாழ்வு வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்," என்றும், 'பொய்த்தன்மைத்தாய மாயப்போர்வையைமெய்யென்றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டி நான் விரும்பகில்லேன்," என்றும் கூறியது மெய்யுரையே"என்பதில் சந்தேகமே யில்லை. "புவியில் பிறக்கக்கடவாய்," என்று சிவபெருமான் கயிலாயத்தில் அருளியதுணைக் குட்பட்டார் சுந்தரர்; திருவெண்ணெய் நல்லூரில் அவனது காட்சியையும், திருவதிகையில் அவனது திருவடி தீக்ஷையையும் பெற்றுர்; பிறகு அவனிடம் வைத்த உள்ளத்தை மாற்றுது, செந்நெறியில் வாழ்ந்து தமக்கு வகுக்கப்பட்ட வாணுள் முடிவை எதிர்பார்த்திருந்தார். வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்,என்றுகூறி,இறைவனை மறவாது. 'இந்திரன் மால் பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம வந்தெதிர்கொள்ள" இறைவனுடைய திருவடி நீழலை அடைந்தவருடைய மண்ணுலக வாழ்க்கை தவநெறியேயன்றி அவநெறியன்று.

"என்னுடைய தோழனுமாய்" சுந்தரருக்குத் "தம்பிரான் தோழர்" என்ற பெயர் உண்டு. திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொள்ளப்பெற்றதை ஒரு தோழனுடைய செயல் என்றே இவர்கூறுகிறுர். "என்றனை ஆள் தோழனை" "தன்னைத்தோழமைஅருளித்தொண்டனேன்செய்த துரிசுகள், பொறுக்கும்நாதனை""என்னுடைய தோழனுமாய்" என்றுள்ள தொடர்கள் இதனை வலியுறுத்தும்.

இறப்பவேதீயசெயினும்தன்னட்டார்
பொறுத்தல் தருவதொன் றன்றோ—[நிறக்கோங்
குருவவண்டார்க்கும் உயர்வரைநாட
ஒருவர் பொறை இருவர் நட்பு.

(நாலடியார் 223)

என்னும் பாடலுக்கு இவ்விருவர்களுடைய தோழமையே சிறந்த உதாரணமாம். சுந்தரராலே சிவபெருமானுக்கு ஆகவேண்டியதொன்றுமேயில்லை. என்றாலும் அவ்விறைவன்தாமேவலுவில் வந்து சுந்தரருக்குப் பல உதவிகளைச் செய்தருளினுன். இருமுறை சுந்தரருடைய பசியைப் போக்குவதற்காகச் சோறு அருளியதை முற்கனவே கூறியுள்ளோம். பல சமயங்களில் சுந்தரருடைய வேண்டுகோள்களைப் பூர்த்தி செய்வித்தான். குண்டையூரில் ஏராளமான நெல்லைக் கொடுத்தான்; திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னுக்கித் தந்தான்; இவற்றையெல்லாம விட, தன் பெருமையைப் பாராதே, சுந்தரர்பொருட்டு, அவருடன் 'ஊடல்' கொண்டிருந்த பரவையார்பால் இருமுறை ஊடல் தீர்க்கும் தூதனுக எழுந்தருளினுன். இவ்விஷயத்தைக் கூறும் சேக்கிழார் "நாயன் நீயே, நான் உமக்கிங்கடியேனுகில் நீர் எனக்குத் தாயின் நல்ல தோழருமாம் தம்பிரானுரேயாகில்.... பரவை யுறுபுலவி தீர்த்துத்தாரும்" என்று சுந்தரர் வேண்டியதாகத்தெரிவிக்கிறுர். நண்பர் இருவர்களுடைய சுகதுக்கங்கள் அவ் விருவருக்கும் பொது என்பதை இந்த விருத்தாந்தம் உலகத்தாருக்குப் போதிக்கின்றது

—(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் சிவசங்கர பண்டிதர்

—— அ. சிவகுருநாதன் ——

கல்வியும் செல்வமும் வளர்கின்ற ஈழநாட்டிலே தோன்றி தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற கல்விமான்களுள் நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர் என்பார் தமிழ்—சமஸ்கிருதம் இரண்டிலும் பெரும் புலமை வாய்ந்து விளங்கினர். அந்தப் பெருமை பொதுவாக யாழ்ப்பாணத்துக்கும் சிறப்பாக நீர்வேலிக்கும் உரியதாகும் சிவசங்கர பண்டிதரவர்கள் சுதேச நன்மைகருதியும், சைவ சமயாபிவிருத்தி-பாஷாபிவிருத்தி நோக்கியும் பல சற்கருமங்கள் செய்துவந்தார். இவர் செய்த நூல்களுள் சைவப் பிரகாசனம் என்னும் அரியநூல் தென்னிந்திய சைவ சித்தாந்தநூற் பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பெற்றுளது. அதற்குஅறிஞர் உதவிய சிறப்புக் கவிகளுள் ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலர் அவர்கள் பாடியது:

"நற்சுருதி யிற்பரந்த
ஞானமெலாந் தான்சுருக்கிப்
பொற்புறவே சொற்கொள்
பொருள்விளக்கிச் சொற்றனநூல் [நூல்
சைவப்பிர காசன
சாற்றுபுகழ்ச் சங்கரனுஞ்
சைவப் பிரகாச பண்டிதன்"

என்பது முதற் சிறப்புக்கவி.

இதனால் சிவசங்கர பண்டிதருக்குச் "சைவப்பிரகாசபண்டிதன்" என்னும் பட்டநாமம் வழங்கப்படுதல் கண்டுகொள்க.

"கலைமகள் வாழ்க்கை முகத்ததெனி [னும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்
[வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வதுபோல்மாயா
[புகழ் கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.'

என்றாற்போல, ஓதநீர் வேலி யுலகத்தில் அழியாப் புகழ்பெற்ற சிவசங்கர பண்டிதர் வாழ்க்கையின் நோக்கினை விளங்குந்தரம் அறிவாளிகளுக்கேயுளதாம். நிற்க,

எங்கள் சங்கரபண்டிதர் சமயக் கல்வி கற்பிக்கும் உயர்ந்த நோக்கத்தோடு தமது ஊராகிய நீர்வேலியில் சைவப் பள்ளிக்கூடம் ஒன்று ஸதாபித்து முறைப்படி நடத்திவந்தார். அதற்கு சங்கர பண்டிதர் பள்ளிக்கூடம் என்னும் பெயர் வழக்குப் பொதுசனங்களிடம் உண்டாயிற்று, இன்றைக்கும் பண்டிதர் பள்ளிக்கூடம் என்ற பெயர் மறந்துவிடப்படவில்லையாதலால், என்றைக்கும் அப்பெயர்வழக்கு நிலவும் என்பது திண்ணமே. இப்பள்ளிக்கூடம் சில வருடங்களுக்கு முன் விலைப்பட்டு இன்னொருவர் கொண்டிருந்தபோதிலும், சங்கரபண்டிதர்பெயர் அப்பள்ளிக்கூடத்தில் வழங்கிவருதல் நீர்வேலிக்குப் பெருமைச் செய்தியாம்.

உலகத்தில் ஆங்காங்கு பொதுஜன சேவை செய்யும் அபிமானிகள் பொதுநலப்பணி செய்துவந்த பெரியோரைப் பேணி அவர்களை உதாரணமாக வைத்துக் கொண்டாடி நன்முயற்சிகள் செய்து வருதலைக் கண்டுங் கேட்டும், நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர் பெயரொழியும்படி எவரேனும் நினைக்கிலும் முயற்சிபண்ணிலும் அது செய்ந்நன்றி மறப்பதோடு பொதுநலசேவைக்குப் பாதகமாயும் முடியுமன்றோ!

"எந்நன்றி கொன்றார்க்கு முய்
வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றபடி,

அன்றியும் பண்டிதர் பெயர் அவ்வூரிலுமில்லாது போகும்வழியில் நிற்றல் வழிவழி நிற்கும் பழியுமாகும். திருக்குறளில் "பெரியோரைப் பிழையாமை" என்னும் அதிகாரத்தில் பெரியோரை அவமதித்தலால் வரும் தீமைகளும் துன்பங்களும் கூறப்படும்.

"எரியாற் சுடப்படினு முய்வுண்டா
முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகுவார்"

என்றபடி, அப்படியான தீமைக் கேதுவாய பிழை செய்பற்க என்பதாம்.

சிவசங்கர பண்டிதரைப்பற்றியும் சைவாசார விருத்தியாகும்படி பண்டிதர் தொடங்கி நடத்திவந்த பள்ளிக்கூடம் இப்போதிருக்கும் நிலைமை பற்றியும் ஆசிரியர் சிவபாதசுந்தரம் B A. அவர்களோடு பேசும்போது "நீர்வேலிப் பள்ளிக்கூடத்துக்கு ஸ்ரீமத் சிவசங்கரபண்டிதர் மண்டபம்" என்று பெயரிடுதல் இயலாததன்று என அவர் கூறியதும் அவ்வூர்வாசிகளால் நோக்கத்தக்கது.

ஆதலால் நீர்வேலியிலுள்ள இளைஞரும் அவ்வூர் அபிமானிகளும் ஒன்றுபட்டு அடிப்பட்டு வழக்கிவந்தபண்டிதர் பெயர் வழக்கை ஓங்கிவளரச் செய்தல் அவர்கள்மேல் பொறுத்த பெருங்கடனாம். அதற்கு வேண்டிய முறைகளை ஆலோசனைபண்ணி வழிவழியே திரு அத்தியார் அவர்களோடு கலந்து வேண்டும் ஒழுங்கு செய்தல் கூடுமென்ற பொதுநோக்கத்தோடு இது விண்ணப்பம் செய்யத் துணிந்தோம்.

---

# தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனாகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன்எழுதவும். 40 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 ஈப்போ ரோட்
செண்டுல்
கோலாலம்பூர்.

தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்

Mis 77 7-7-47 to 5-8-47.

---

## தமிழ்
## ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

ஆசிரியர் போதனுகல்லூரி
ஆசிரியர்களால் வகுக்கப்பட்ட
பாடத்திட்டம்

| | | |
|---|---|---|
| முதலாம் அல்லது இரண்டாம் பகுதி | | |
| முதலாம் பாடம் | ரூபா | 7 50 |
| அடுத்த ஒவ்வொருபாடத்துக்கும் | | 5 00 |

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 15-7 — 25-8-47 (செ)

---

## விறகு விற்பனவிற்கு

எழுதுமட்டுவாலில் ஐயனக்கை தோட்டத்தில் விறகு விற்பனவிற்கு இருக்கிறது. தோட்டம் Main Road இல் விலை ஒரு ரூபாய் ஒரு வண்டில். தோட்டத்திற்குள் வாங்கிக்கொள்ளலாம்.

91 22-7-47

---

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திற மூலகந் தன்னி லிப்பரோ டும்ப ரஞ்சிச்
சித்தமெய் தளர்த லின்றிச் சிதைவுறு வகைமை தேர்ந்து
வித்தக வெண்ணி லாடல் வியப்பொடு புரிந்தா னவி
முத்தர்தம் விழியி னன்றி முன்னுறு விமல மூர்த்தி.

சீவன் முத்தர்களது ஞானக் கண்ணிற்கன்றி, ஏனையோர் கண்களுக்குப் புலப்படாத நிர்மலமூர்த்தியாகிய சண்முகப் பெருமான், பூவுலக வாசிகளாகிய மனிதரும், மேலுலக வாசிகளாகிய தேவர்களும் பயந்து உள்ளமுமுடலும் தளருவதேயல்லாமல், அவர்கட்கு எவ்வகையான அழிவும் நேராவண்ணம் திருவுளத்தடைத்து, திருவருட்டிறமையோடு கூடிய கணக்கிறந்த திருவிளையாடல்களை, எவரும் வியப்படையும் வண்ணம், மேலே சொல்லப்பட்டவாறு செய்தருளினரென்பது கருத்து.

வேறு எவராலுஞ் செய்தற்கரிய திறமைப்பாட்டோடு கூடிய திருவிளையாடலாதலின் "வித்தக....ஆடல்" என்றார்; இத் திருவிளையாடல்களைச் செய்வன சண்முகத் தெய்வத்தின் அருள் வடிவங்களேயன்றி, அத்தெய்வம் தாமே செய்வனவல்ல; அருள் வடிவங்கள் எண்ணிலவாக, அவை செய்யுந் திருவிளையாடல்களு மெண்ணிலவெனக் கொள்க; ஆவி முத்தர். சீவன் முத்தர், இவர்கள் சரீரத்தோடு கூடியவர்களா யிருக்கும்போதே இருவினையொப்படைந்தவர்களாய் எந்நேரமும் இறைவனுடைய திருவடித் தாமரைகளைத் தம்முள்ளக்கமலத்து உறப்பதித்துச் சிந்தித்து அதனாலடையும் பேரின்பத்திலே திளைத்துள்ளவர்களென்ப, வேதக் காட்சிக்கும் உபநிடதத்துச்சியின் விரித்த போதக் காட்சிக்கும் உணர்வரும் புனித மூர்த்தியாகிய கடவுளை இங்கே ஆவிமுத்தர்தம் விழியிலன்றி முன்னுறு நிமலமூர்த்தியெனக் கூறியமை சீவன்முத்தர்களின் தவப்பேற்றை விளக்குதற்கென்க,

[முன்னுரு - வினை அஞ்ஞானிகளது ஊனக்கண்ணுக்குத் தோற்றுது.]

ஆயது காலை ஞாலத் தவுணர்க ளதனை நோக்கி
யேயிது செய்தார் யாரே யென்றுவிம் மிதரா யெங்கள்
நாயகன் வடிவந் தன்னை நனிபெறும் பவத்துட் டங்குத்
தீயவ ராதலாலே கண்டிலர் தியக்க முற்றார்.

அவ்வாறான சமயத்தில், இப்பூவுலகத்திலுள்ள அசுரர்கள் அம் மாறுதல்களையெல்லாம் அவதானித்து, இச் செயற்கருஞ் செயலைச் செய்தவர் யாரோவென்று வியப்படைந்தவராய், மிகவும் அதிகமான தீமையின்பாற்பட்ட கொடியவராதலின், எங்கள் முருகப்பிரானுடைய திருமேனியைக் காணமுடியாராய்த் தியக்கமடைந்தனரென்பது கருத்து.

தம் தலைவர்களாகிய சூரன், சிங்கன், தாரகன் முதலாயினோர்தாமும் இப்படியான அற்புதச் செயல்களைச்செயயவல்லுநரல்லராதலினாலும், தேவர்கள் இச்செயலைச் செய்ய நினைக்கவும் மாட்டாராதலினாலும், செயற்கருஞ் செயலை ஒருவன் செயதல் முடியாது பலரே செய்திருத்தல் வேண்டுமெனச் சந்தேகங் கொண்டாராதலினாலும், முருகவேள் தோற்றத்தை அவ்வசுரர் அறியாராதலாலும், இதனைச் செய்பவர் மகா பராக்கிரமமுடையவராக விருத்தல்வேணடுமென ஐயிர்த்தனராதலாலும், அசுரர்கள், "ஏ! இது செய்தார் யாரே?" என்று விம்மிதராய்...." தியக்கமுற்றாரென்க.

"எங்கள்" என்றது ஆசாரியசுவாமிகள் முருகவேளிடத்துக்கொண்ட பக்தியையும் அபிமானத்தையும் விளக்க வந்த மொழியென்க: நனி, உரிச்சொல், கண்டிலர் எதிர்மறைப் பொருளில் வந்த இறந்தகால முற்றெச்சம்.

[ஏ, வியப்பின் ட் குறிப்பு.] (31)

---

### பண்டிதர்
### ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்
# அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன:-

திருவாளர்கள்:

| | ரூ. | ச |
|---|---|---|
| முன்கணக்குப்படி | 1203 | 50 |
| S. ஆனந்தராஜன், Medical Student, கரம்பன் | 5 | 00 |
| திரு.G. G. பொன்னம்பல மவர்களின் பாரியார் | 10 | 00 |
| N. கந்தையா, பென்ஷனர், கோட்டடி | 5 | 00 |
| A. கணபதிப்பிள்ளை, 6 ரஸவலிலேன், வெள்ளவத்தை | 10 | 00 |
| ருவ்சாகிப் G. ராஜகோபாலபிள்ளை, F R. H S, திரிசிராப்பள்ளி | 15 | 00 |
| S. P. கந்தையா, மனேஜர், இந்துசாதனம் | 10 | 00 |
| இந்துசாதன ஆலயத்திற் கடமையாற்றுவோர் | 55 | 00 |
| ஆக | 1313 | 50 |

☞ பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற ஆவணி மீ உஎ உ (12-9-47) வெள்ளிக்கிழமை நடத்த உத்தேசித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணுக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம் உதவுக; மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனாதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

| | | |
|---|---|---|
| கா. கந்தையா, தலைவர். | க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி. | அ. கனகசபாபதி, தனாதிகாரி, |

பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

புதன் யூலை 23

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி ஆர் சந்தனம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 ஆர் ராஜம், ஆர் சரசுவதி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஆர் ராஜம், ஆர் சரசுவதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஆர் ராஜம், ஆர் சரசுவதி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 டி ஆர் சந்தனம் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6—15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மந்திரிகளுடன் பேச்சு 8 பாடகன் நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலச் செய்தி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 முடிவு.

வியாழன் யூலை 24

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7—30 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8 30 கே வி வேணுகோபால் ஐயர் பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 டி எஸ் ஷண்முகசுந்தரம் பிள்ளை பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 அரிசி பங்கீடு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி கே சாவித்திரி அம்மாள் கோட்டு வாத்தியம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 டி எஸ் ஷண்முக சுந்தரம்பிள்ளை பாட்டு 10-30 முடிவு

வெள்ளி யூலை 25

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி எஸ் சேஷாத்ரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 அம்பாசமுத்திரம் எம் சுப்பையா முதலியார் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எஸ சேஷாத்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி எஸ சேஷாத்திரி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி எஸ் வைத்தியநாதன் நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 அன்னியர் தொடர்பு வேண்டுமா? 8 கே என் ராஜம் கே என் கமலம் பாட்டு 8-30 டி எஸ் வைத்தியநாதன் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கே பி சுந்தராம்பாள் இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே ஜே ஜோஸ் தில்ரூபா 10 நீங்கள் கேட்டவை 10 30 முடிவு.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம், என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மனேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப்பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்,

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48



# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு விதம். சிறிபவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std .5 1 7-47—30-6-48 (செ)



# விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், உநுமதிபெற்றுப் பல்வைத்தியம், சண் வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறேனென்பதையும், கட்பார் வைக்குரிய கண்ணுடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் (காலை 9 மணிதொடக்கம் 12 வரை / மாலை 2 „ 5 „)

T-t 28 11-7—10-10-47. **S. சார்ல்ஸ்பத்திரானு.**



# சென்னையிலிருந்து கப்பல் பிரயாணம்
## மலேயாவுக்கு உங்கள் பிரயாணம் நிச்சயமா ?

எம்மால் சென்ற சில மாசங்களாக நாகபட்டணம் மார்க்கம் ஏற்பாடாகியிருந்த பிரயாண வசதிகள் கப்பல்வரை திருப்திகரமாயிருந்தும் கப்பலில் வசதியீனங்களை யுணர்ந்து எமது நண்பர்கள் சௌகரியத்துடன் குடும்ப சமேதராகப் பிரயாணஞ் செய்வதற்கு ஏற்ற வசதிகளடங்கிய கப்பல் மாசம் ஒருமுறை சென்னையி லிருந்து புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகளை கைகூடுவதை அறியத்தருவதுடன் எம்மிடம் எந்த நேரங்களிலும் விபரம் பெறுதற்கேற்ப ஓர்காரியாலயம் ஸ்ரான்லிறோட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்போல் நாகபட்டணம் மார்க்கமும் வசதிகள் செய்யப்படும்

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்

Std 23. 6-6-47—6-6-48



# இப்பொழுது எங்கள் கைவச முள்ளன!

| | |
|---|---|
| சுத்தமான "பிறேக்" எண்ணெய் | டுக்கோ பிறே வர்ணங்கள் |
| ஸிமோனி ஸ்பொலிஷ் | "சைக்கிள் கள் |
| ஹோர்-பல்ப்ஸ் | சைக்கிள்களிற் தேவையான |
| குட்ஸ்யர் வான்-பெல்ற்ஸ (FanBelts) | தனிப்பொருள்கள் |
| மின்சாரப் பொருள்கள் | றேடியோக்கள் |
| | ரயர் ரியூப்கள் |

## T. N. லிங்கம் & ஸன்,

எவ்வகையான மோட்டார் வண்டிகளுக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான பொருள்களும் தனிப் பொருள்களும் கொடுப்பவர்கள்; மின்சாரப் பகுதிக் கன்றுக்ரர்கள்.

தெலிவோன் இல. 108.
248, K. K. S யாழ்ப்பாணம்.
19-6-47 Std 23 24-6-47—22-7-47.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, July, 22, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org